## உறுதிமொழியை நிறைவேற்றும் பண்பு, உடன்படிக்கைகள் மற்றும் வாக்குறுதிகளை நிறைவேற்றுதல்

இவர் நபித்தோழரானன ஹஜ்ரத் அனஸ் பின் நஜ்தர் (ர) அவர்கள், ஏதோ காரணத்தால் பத்ரு போரில் கலந்துகொள்ள முடியாது போயிற்று, அதன் காரணமாக அவருக்கு பெரும் வருத்தம் ஏற்பட்டது. இந்தக் கைசேதமான உணர்வுகளின் தாக்கத்திற்கிடைய ஒருநாள் இறைத்தூதர் ﷺ அவர்களிடம் கூறினார்கள், இறைத்தூதரே ﷺ நான் பத்ரு போரில் கலந்துகொள்ள முடியவில்லை, இது நிராகரிப்போருடன் நீங்கள் மேற்கொண்ட முதல் போராகும். நிராகரிப்போர் உங்களுடன் மீண்டும் ஒரு முறை போரிடும் நேரத்தை அல்லாஹ் உண்டாக்குவானேயானால் நீங்கள் காண்பீர்கள் நான் என்ன செய்யப்போகிறேன் என்று. இவ்விதமான தான் தவறிவிட்ட ஒன்றிற்குப் பரிகாரமாக ஹஜ்ரத் அனஸ் பின் நஜ்தர் (ர) அவர்கள் தாமா கவே அல்லாஹ்வின் பாதையில் போரிடும் இணைவைப்போருடன் சண் டையிடும் ஒரு உறுதியான எண்ணத்தை மேற்கொண்டார்கள். உஹது போருக்கான நேரம் வந்தபோது அவர்கள் ஹஜ்ரத் சமது பின் முஆத்ஜ் (ர) அவர்களிடம் கூறினார்கள்: இறைவன்மீது சத்தியமாக நான் சுவர்க்கத்தை விரும்புகிறேன், உஹது மலைக்குப்பின்னாலிருந்து எனக்கு சுவர்க்கத்தின் நருமணம் வருகின்றது. பின்பு போர்க்களத்தில் குதித்தார்கள், வீரத்துடன் போரிடுபவராகக் காட்சியளித்தார், இறுதியில் ஷஹீதாகியும் விட்டார் கள். அவர்களுடைய உடலில் எண்பதுக்கும் அதிகமான காயங்கள் ஏற் பட்டிருந்தன, எந்த அளிவிற்குக் காயமடைந்திருந்தார்கள் என்றால் அவரு டைய முகம் அடையாளம் காண்பது கடினமாக ஆயிற்று, அவருடைய சகோதரர் ஹஜ்ரத் அனஸ் பின் நஜ்தர் (ர) அவர்கள்,அவருடைய கைவிரல் இருந்த ஒரு குறியைக்கொண்டு அடையாளம் காட்டினார்கள் **(متفق عليه).** நபித் தோழர்கள் கீழ்க்காணும் வசனம் அவரையும் அவருடைய தோழர் களைப் பற்றியும் அருளப்பட்டிருந்ததாகக் கருதினார்கள்:

مِّنَ ٱلْمُؤْمِنِينَ رِجَالٌ صَدَقُوا۟ مَا عَٰهَدُوا۟ ٱللَّهَ عَلَيْهِ ۖ فَمِنْهُم مَّن قَضَىٰ نَحْبَهُۥ وَمِنْهُم مَّن يَنتَظِرُ ۖ وَمَا بَدَّلُوا۟ تَبْدِيلًا

**(الأحزاب: 23)**

பொருள்: *நம்பிக்கையாளர்களில் இத்தகையோரும் உள்ளனர், அல்லாஹ் விடம் தாங்கள் கொடுத்த வாக்குறுதியை அவர்கள் மெய்ப்படுத்திக்காட்டி யுள்ளனர், அவர்களில் சிலர் இறந்து தமது இலட்சியத்தை அடைந்துவிட்ட னர், இன்னும் சிலர் அதற்கான நேரத்தை எதிர்ப்பார்த்தவண்ணம் இருக் கின்றனர், அவர்கள் தம்முடைய நடத்தையில் எவ்வித மாற்றமும் செய்ய வில்லை.*

ஹஜ்ரத் க்ஹதீஜதுல் குப்ரா (ர) அவர்கள் செய்த தியாகங்கள் நிகரற்றவை. அவர்கள் தன்னுடைய அனைத்து சொத்துக்களையும் இறைத்தூதர் ﷺ



www.uzairfalahi.com

அவர்களுக்காகவும் அவர்களுடைய அழைப்புப்பணிக்காகவும் வாரி வழங்கி விட்டார்கள். தன்னையே அற்பணித்ததோடு தன்னுடைய செல்வம், தன்னுடைய செல்வாக்கு அனைத்தையும் இஸ்லாத்திற்காகப் பயன்படுத்தினார்கள். இறைத்தூதர் ﷺ அவர்களுக்கு அனைத்து சுகங்களையும் இயன்ற அளவிற்கு அளித்து அவர்களுடைய துயரங்களையும் பகிர்ந்துகொண்டார்கள். யாருமே ஈமான் கொள்ள முன்வராத சமயத்தில் தாமே முன்வந்து ஈமான் கொண்டுவந்தார்கள். ஒவ்வொரு சமயத்திலும் அவர்களுக்கு ﷺ உறுதுணையாக இருந்தார்கள், இதன் காரணமாகவேதான் அவர்களுடைய மறைவுக்குப்பின்பும் இறைத்தூதர் ﷺ அவர்கள் வாழ்நாள்வரை அவரைப் புகழ்ந்து பாராட்டினார்கள். அன்பு மற்றும் நம்பிக்கைக்கான உறுதிமொழியினை இறுதிவரையில் பேணிப்பாதுகாத்துவந்தார்கள். ஆகவே, அவர்களுடைய தோழிகளுடனும் பண்புடன் நடந்துகொண்டதோடு அவர்களைக் கண்ணியப்படுத்தியும் வந்தார்கள், அவர்களுக்கு அன்பளிப்புகளை வழங்கி வந்தார்கள். ஹஜ்ரத் க்ஹதீஜா (ர) அவர்களுடைய குடும்பத்தைச் சார்ந்த எவரும் அவர்களைச் சந்தித்தால் அல்லது அவர்களை எங்கும் பார்த்தால் அவர்களுடைய மகிழ்ச்சி எல்லை கடந்துவிடும். ஒருமுறை ஹஜ்ரத் ஆயிஷா (ர) அவர்கள் ஹஜ்ரத் க்ஹதீஜதுல் குப்ரா (ர) அவர்களுடனான இறைத்தூதர் ﷺ அவர்களின் நிகரற்ற பற்று மற்றும் அன்பினைப்பற்றிக் கூறும் வகையில், அல்லாஹ் தஆலா உங்களுக்கு சிறந்த மனைவிகளையெல்லாம் அளித்திருந்தும் நீங்கள் ஒரு வயது முதிர்ந்த பெண்மணியைப்பற்றி இந்த அளவிற்குப்புகழந்து பெருமையுடன் பேசுகின்றீர்களே என்று கூறியபோது, இதனைக்கேட்ட இறைத்தூதர் ﷺ அவர்கள் கோபமடைந்தவர்களாகக் கூறினார்கள், ஒருபோதும் இல்லை, அல்லாஹ் தஆலா அவர்களைவிடச் சிறந்த மனைவிகளை எனக்கு அளிக்கவில்லை, மக்களெல்லாம் என்னை நிராகரித்துப்பொய்யாக்கியபோது அவர்கள் என்மீது ஈமான் கொண்டுவந்தார்கள், என்னை உண்மையென சாட்சி கூறினார்கள், என்னிடம் ஒன்றுமில்லாதிருந்த சமயத்தில் தன்னுடைய செல்வத்தைக்கொண்டு எனக்கு எல்லா வகையிலும் உதவினார்கள். அவரைக்கொண்டுதான் அல்லாஹ் எனக்குக் குழந்தைச்செல்வங்களை அளித்தான் (அஹ்மத்). இறைத்தூதர் ﷺ அவர்களின் இந்த நிலை அவர்களுடை நம்பிக்கையைப் பேணிப் பாதுகாப்பதற்கான நிகரற்ற எடுத்துக்காட்டாகும்.

இறைத்தூதர் ﷺ அவர்கள் நபித்தோழர்களை எவ்வாறு நெறிப்படுத்தியிருந்தார்கள் என்றால் அவர்களில் ஒவ்வொருவரும் நற்குணம், நன்னடத்தை மற்றும் நேர்மையில் நிகரற்றவர்களாக இருந்தனர். மதீனாவில் அன்சாரிகளில் சிலர் இறைத்தூதர் ﷺ அவர்களிடம் அமர்ந்திருந்தார்கள், இறைத்தூதர் ﷺ அவர்கள் அவர்களை நோக்கிக் கூறினார்கள், நீங்கள் இறைத்

www.uzairfalahi.com

தூதரிடம் ﷺ பைஅத்து செய்துகொள்ளமாட்டீர்களா? நபித்தோழர்கள் கூறினார்கள் இறைத்தூதரே ﷺ நாங்கள் பைஅத்து செய்கிறோம், ஆனால், எங்களுக்குக்கூறுங்கள் எதன்மீது நாங்கள் பைஅத்து செய்யவேண்டும் என்று. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَلَى أَنْ تَعْبُدُوْا اللهَ وَلاَ تُشْرِكُوْا بِهِ شَيْئاً، والصَّلَوَاتُ الْخَمْسِن وَتُطِيْعُوْا ـ وَأَسَرَّ كَلِمَةً خَفِيَّةً ـ وَلاَ تَسْأَلُوْا النَّاسَ شَيْئاً

*பொருள்: (நீங்கள் பைஃஅத் செய்யவேண்டியது) நீங்கள் அல்லாஹ்வை மட்டுமே வணங்குவீர்கள் என்றும் அவனுடன் யாரையும் இணை வைக்க மாட்டீர்கள் என்றும், ஐவேளைத் தொழுகை நிறைவேற்றுவீர்கள் மற்றும் கீழ்ப்படிந்து நடப்பீர்கள், பின்பு மெதுவாகக் கூறினார்கள், நீங்கள் யாரிடமும் எந்தப்பொருளையும் கேட்கமாட்டீர்கள் என்று பைஅத்து செய்யுங்கள். ஹஜ்ரத் அவ்ஃப் பின் மாலிக் (ர) அவர்கள் கூறுகிறார்கள் நான் இந்த பைஅத்து செய்தவர்களில் சிலரைத் தாங்கள் செய்த இந்த வாக்குறுதியைப் பேணிப்பாதுகாப்பவர்களாகக் கண்டேன் அவர்களுடைய சாட்டையும் கீழே விழுந்துவிடுமானால் அவர்கள் யாரிடமும் அதனைச் சற்று எடுத்துக் கொடுங்கள் என்று கேட்டதில்லை (முஸ்லிம்)*

மதீனாவில் அர்ஃகூப் என்ற ஒருவர் இருந்தார், அவரிடம் பேரீத்த மரங்கள் இருந்தன, அவற்றில் அதிகமான பேரீத்தப்பழங்கள் காய்க்கும். ஒரு நாள் ஒரு ஏழை மனிதன் அவரிடம் வந்து பேரீத்தப் பழங்களைக் கேட்டான். அர்ஃகூப் இப்போது ஒன்றுமில்லை, பழங்கள் காய்க்கும்போது வந்து கேள் என்று கூறினான். மீண்டும் அந்த மனிதன் வந்தபோது கூறினான் இன்னும் இவை காயாகவே உள்ளன, பழுத்துவிட்ட பின்பு வா என்று அர்ஃகூப் கூறினான். இவ்விதமாகவே பலமுறை காரணம் காட்டி அர்ஃகூப் அந்த ஏழையைத் திருப்பி அனுப்பிவிட்டான். அந்தப் பேரீத்தப் பழங்கள் பழுத்து விட்டதும் இரவோடிரவாகப் பேரீத்தப்பழங்களைப் பறித்து மறைத்து வைத்துவிட்டான். காலையில் அந்த ஏழை வந்தபோது மரங்களில் பேரீத் தப்பழங்களே இல்லை, அந்த ஏழை மனம் உடைந்து திரும்பிச்சென்றுவிட் டான். அர்ஃகூபின் இந்தச்செயல் மதீனா முழுவதும் அவனை வாக்கு மீறுபவனாக எந்த அளவிக்குப் பிரபலப்படுத்திவிட்டது என்றால் வாக்கு மீறுவதற்கு உதாரணமானவனாக ஆகிவிட்டான்.

கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவது ஒரு மகத்தான பண்பாகும். உடன்படிக்கைகள், வாக்குறுதிகள் ஆகியவற்றை நிறைவேற்றுவது, ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை ஏற்று முடிப்பது என்பது அனைத்துக் காலங்களிலும் அனைத்து சமூகங்களிலும் போற்றப்படும் ஒரு பண்பாகும்.

www.ujaifalahi.com

*அல்லாஹ் தஆலா* அனைத்து மனிதர்களையும், குறிப்பாக, முஸ்லிம்களை இந்தப்பண்புகளை மேற்கொண்டு நடக்குமாறு கட்டளையிட்டுள்ளான்:

**(34:الإسراء)** وَأَوْفُوا۟ بِٱلْعَهْدِ ۖ إِنَّ ٱلْعَهْدَ كَانَ مَسْـُٔولًا ﴿٣٤﴾ பொருள்: *மேலும், ஒப்பந்தத்தை முறையாகப்பேணி வாழுங்கள், ஏனெனில், ஒப்பந்தங்களைப்பற்றி நீங்கள் நிச்சயம் விசாரணைசெய்யப்படுவீர்கள்.* மற்றொருவசனத்தில் கூறுகிறான்:

**(النحل: 91)** وَأَوْفُوا۟ بِعَهْدِ ٱللَّهِ إِذَا عَـٰهَدتُّمْ ﴿٩١﴾ பொருள்: *மேலும், அல்லாஹ்விடம் நீங்கள் ஒப்பந்தம் ஏதும் செய்திருந்தால் அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுங்கள்*

**வாக்குறுதி பேணுதலின் அம்சங்கள் வேறுபட்டவை, உதாரணமாக:**

**அல்லாஹ்வுடனான வாக்குறுதி**

அல்லாஹ்வுடனான வாக்குறுதி என்பது மனிதனுக்கும் அல்லாஹ்வுக்குமிடையிலான ஒரு ஒப்பந்தம், அதனை நிறைவேற்றுவது மனிதன்மீது கடமையாகும். அந்த வாக்குறுதி யாதெனில், மனிதன் அல்லாஹ்வை மட்டுமே வணங்கவேண்டும், அவனுக்கு மட்டுமே கீழ்ப்படிந்து அடிபணிந்து நடக்க வேண்டும் என்பதாகும். இதில் யாரையும் இம்மியளவும் இணைக்கவோ இணை வைக்கவோ கூடாது. இதனையே திருக்ஃகுர்ஆன் கூறுகிறது:

أَلَمْ أَعْهَدْ إِلَيْكُمْ يَـٰبَنِىٓ ءَادَمَ أَن لَّا تَعْبُدُوا۟ ٱلشَّيْطَـٰنَ ۖ إِنَّهُۥ لَكُمْ عَدُوٌّ مُّبِينٌ ﴿٦٠﴾ وَأَنِ ٱعْبُدُونِى ۚ هَـٰذَا صِرَٰطٌ مُّسْتَقِيمٌ ﴿٦١﴾ **(يس: 60-61)**

பொருள்: *ஆதமின் மக்களே, நீங்கள் ஷைத்தானுக்கு அடிபணியாதீர்கள், அவன் உங்களுடைய வெளிப்படையான பகைவன் என்றும், எனக்கே அடிபணியுங்கள், இதுவே நேரான வழி என்றும் நான் உங்களுக்கு அறிவுறுத்தியிருக்கவில்லையா?.* மனிதனுடைய இயல்பில் ஏகத்துவம் பிசைந்துவிடப்பட்டிருக்கின்றது. மனிதனுடைய பகுத்தறிவு இறைவன் மீது நம்பிக்கை கொள்ளாமல் இருக்கவிடுவதில்லை. இறைவன் இருக்கிறான் என்று பகிரங்கமாக நம்புவதுடன் அவனுடைய பண்புகளைமனதார நம்புவது மனித அறிவின் கட்டாயத்தேவையாகும். இதனை நிராகரிப்பது என்பது ஒருவன் தன்னையே நிராகரிப்பதற்குச் சமமாகும். படைப்புகளில் அல்லாஹ்வின் அத்தாட்சிகள் கூக்குரலிட்டு என்னைப்படைத்தவன் ஒருவன் இருக்கிறான் எனக்கூறுகின்றன. மனிதனுடைய படைப்பும் அனைத்தும் தாமாகவே உண்டாகிவிடவில்லை என்பதற்கான ஆதாரமாகும். இந்தப் படைப்புகளின் ஏற்பாடுகளெல்லாம் மனிதனுடைய அனைத்துத்தேவைகளையும் முழுமைப்படுத்துவதற்காகவே உறுதிப்படுத்தப்பட்டுள்ளன, இந்தப் படைப்புகளிலிருந்து மனிதனைப் பிரித்துவிட்டால் அனைத்துமே தேவையற்றவையாகிவிடும். இந்நிலையில், அனைத்துப் படைப்புகளும் மனிதனுக்காகவே

*படைக்கப்பட்டவையென்றால் மனிதன் யாருக்காகக் படைக்கப்பட்டுள்ளான்? இதனைப்பற்றித் திருக்ஃகுர்ஆன் இவ்வாறு கூறுகின்றது:*

وَمَا خَلَقْتُ ٱلْجِنَّ وَٱلْإِنسَ إِلَّا لِيَعْبُدُونِ ﴿٥٦﴾ **(الذاريات: 56)**

*பொருள்: நான் ஜின்களையும் மனிதர்களையும் எனக்கு அடிபணியவேண்டும் என்பதற்காகவேயன்றி வேறு எதற்காகவும் படைக்கவில்லை. (அஜ்ஜாரியாத்:56)*

இவ்வகையில், மனிதன் அல்லாஹ்வை வணங்குவதை நிராகரிப்பானேயானால் அவன் தன் படைப்புக்கான நோக்கத்தையே நிராகரிப்பவனாக ஆகிவிடுவான். அல்லாஹ் தஆலா படைப்புகளைத் துவங்குவதற்கு முன்பே மனிதனிடம் நான் உன் இரட்சகனில்லையா أَلَسْتُ என வாக்குறுதி பெற்றிருக்கின்றான். அல்லாஹ்வுக்குக் கொடுத்த அந்த வாக்குறுதியினைப் பாதுகாப்பது மனிதன் தான் அளித்த வாக்குறுதியினை நிறைவேற்றுவதாகும். அவன் இவ்வாறு செய்யவில்லையானால் அவன் தன்னுடைய பரம எதிரியான ஷைத்தானுடைய காலடிகளைப் பின்பற்றிச் செல்கின்றான் என்பது பொருளாகும். இவ்விதமான ஒரு மனிதனை எவ்விதத் தயக்கமுமின்றி நம்பத்தகாதவன், வாக்கு மீறுபவன் மற்றும் துரோகம் செய்பவனாகவே கருதப்படுவான்.

## பரஸ்பர வாக்குறுதிகளை நிறைவேற்றும் பண்பும் பேணுதலும்

இஸ்லாம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும்படி கட்டளையிடுகிறது. இரண்டு மனிதர்கள் அல்லது குழுவினருக்கிடையே உடன்படிக்கை ஏற்பட்டு அதற்கான நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிலையில் அவற்றை நிறைவேற்றுவது கட்டாயமானதாக ஆகிவிடுகிறது, ஒரு முஸ்லிம் தாமாகவே வாக்குறுதிகளை மீறமுடியாது. இறைத்தூதர் ﷺ அவர்கள் ஹுதைபிய்யா உடன்படிக்கையின்போது நிராகரிப்போர் மற்றும் இணைவைப்போர் சமாதானத்திற்கான ஒப்பந்தம் செய்தபோது நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டபின் இறைத்தூதர் ﷺ அவர்கள் அவற்றை இறுதிவரை பின்பற்றினார்கள். அதில் எவ்வகையிலும் மீறல்களுக்கு இடமளிக்கவில்லை, இறுதியில் காஃபிர்களே அதனை மீறி தாமாகவே முறித்துவிட்டனர். ஒரு முஸ்லிம் எப்போதும் வாக்குறுதிகளைப் பேணுபவனாக இருப்பான், உடன்படிக்கைகளை நிறைவேற்றுபவனாக இருப்பான் (புக்ஹாரி). இஸ்லாத்தில் அல்லாஹ் மற்றும் இறைத்தூதருக்கு ﷺ மாறு செய்யும் வகையிலான உடன்படிக்கைகளை நிறைவேற்றுவதும் ஆகுமானதல்ல, அடிப்படையாகவே அவ்விதமான வாக்கு அளிப்பது என்பதே

www.uzairfalahi.com

கூடாது. இவ்வகையிலான உடன்படிக்கைகளை செய்துகொள்ளவும் கூடாது அவற்றைப் பேணவும் கூடாது.

## அளவைகளில் நேர்மையும் பேணுதலும்

ஒருவர் மற்றவருக்கு ஒன்றை அளந்து அல்லது நிறுத்துக்கொடுக்கும்போது சரியாக அளக்கவேண்டும் என்பது ஒரு பொதுவான பண்பாகும், இது ஒரு சமூக ரீதியான உடன்படிக்கை என்றே கூறலாம். ஒரு முஸ்லிம் அதற்குக் கட்டுப்பட்டவனாக ஆகிவிடுகிறான். அவன் ஏமாற்றி குறைவாக அளந்து கொடுக்க முடியாது, எடைகளில் தில்லுமுல்லு செய்யவும்முடியாது. அவ்வாறு செய்பவன் வாக்குறுதி மீறுபவனாகவும் பகிரங்கமாகவே அல்லாஹ்வுக்கு மாறு செய்பவனாகவும் ஆகிவிடுகிறான். அல்லாஹ் கூறுகிறான்:

أَوْفُواْ ٱلْمِكْيَالَ وَٱلْمِيزَانَ بِٱلْقِسْطِ ۖ وَلَا تَبْخَسُواْ ٱلنَّاسَ أَشْيَآءَهُمْ ﴿٨٥﴾ (هود: 85)

பொருள்: *நேர்மையான முறையில் முழுமையாய் அளந்து கொடுங்கள், முழுமையாய் நிறுத்துக் கொடுங்கள், மக்களுக்கு அவர்களுடைய பொருட்களைக் குறைத்துத் தராதீர்கள் (ஹூத்:85)*

## நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுதல்

நேர்த்திக்கடன் என்பது ஒரு மனிதன் அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் வகையிலான ஒரு செயலைச் செய்வதாக முன்பாகவே வாக்களிப்பது. இது அல்லாஹ்வுடனான ஒரு உடன்படிக்கையாகும். பொதுவாகவே ஒரு மனிதன் அல்லாஹ்வுக்கு அளித்த ஒரு வாக்குறுதியை நிறைவேற்றவேண்டும், அவனுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதி நிறைவேற்றப்படுவது மற்ற எல்லா **வாக்குறுதிகளைவிடவும் முக்கியமானதாகும். இது சுவர்க்கவாசிகளின் பண்பாகும். திருக்ஃகுர்ஆன் கூறுகிறது:**

يُوفُونَ بِٱلنَّذْرِ وَيَخَافُونَ يَوْمًا كَانَ شَرُّهُۥ مُسْتَطِيرًا ﴿٧﴾ (الإنسان: 7)

பொருள்: *(இவர்கள் எத்தகையவர்கள் என்றால் உலகத்தில்) நேர்ச்சைகளை நிறைவேற்றிக்கொணடும் அனைத்து திசைகளிலும் துன்பங்கள் பரவக்கூடிய அந்த மறுமை நாளைக்குறித்து அஞ்சிக்கொண்டும் இருப்பார்கள். (அத் தஹர் 7)*

இவ்வாறான நேர்த்திக்கடன் வாக்குறுதிகளை அளிக்கும்போது கவனத்தில்கொள்ளவேண்டிய முக்கியமானவிஷயம் யாதெனில் இதில் அல்லாஹ்வுக்கு மாறு செய்யும் வகையிலோ இணை வைப்பு மற்றும் பித்அத்தான விஷயமாகவோ இருக்கக்கூடாது. அவ்வாறு இருக்குமானால் அதனை நிறைவேற்றுவது தவறானதாகும்.

www.uzarfalahi.com

## வாக்குறுதிகளை நிறைவேற்றுதல்

வாக்குறுதிகளை நிறைவேற்றுவது ஒரு மேலான பழக்கம் மற்றும் சிறந்த பண்பாகும். இஸ்லாம் அதனைப் பின்பற்றி நடப்போரிடம் சிறந்த பண்புகள் ஒவ்வொன்றும் பெறப்படுவதையே காண விரும்புகிறது. வாக்கு மீறுவதை இறைத்தூதர் ﷺ அவர்கள் நயவஞ்சகர்களின் குணங்களில் ஒன்றாகவே கூறியுள்ளார்கள்: آيَةُ الْمُنَافِقِ ثَلَاثٌ:إِذَا حَدَّثَ كَذَبَ،وَإِذَا وَعَدَ أَخْلَفَ،وَإِذَا اؤْتُمِنَ خَانَ *பொருள்: ஒரு நயவஞ்சகனுக்கு மூன்று அடையாளங்கள் உள்ளன: அவன் பேசினால் பொய் கூறுவான், வாக்குறுதி அளித்தால் அதனை மீறுவான் மேலும், அவனிடம் ஒரு அமானிதமும் பொறுப்பும் அளிக்கப்பட்டால் அவன் நம்பிக்கை துரோகம் செய்வான்.*

வாக்கு நிறைவேற்றுவது என்பது ஒரு பாராட்டுக்குரிய பண்பாகும், அதற்கு மாறாக, துரோகம் மற்றும் வாக்குமீறல் வெறுக்கத்தக்கப் பண்பாகும். அல்லாஹ் தஆலா நம்பிக்கை துரோகம் செய்பவர்களை வெறுக்கின்றான், அல்லாஹ் கூறுகிறான்:

إِنَّ ٱللَّهَ لَا يُحِبُّ ٱلْخَآئِنِينَ ﴿٥٨﴾ (الأنفال: 58)

பொருள்:*நிச்சயமாக அல்லாஹ் நம்பிக்கை துரோகம் செய்பவர்களை நேசிப்பதில்லை.* மற்றொரு இடத்தில் அல்லாஹ் கூறுகிறான்:

ٱلَّذِينَ يَنقُضُونَ عَهْدَ ٱللَّهِ مِنۢ بَعْدِ مِيثَـٰقِهِۦ وَيَقْطَعُونَ مَآ أَمَرَ ٱللَّهُ بِهِۦٓ أَن يُوصَلَ وَيُفْسِدُونَ فِى ٱلْأَرْضِ ۚ أُو۟لَـٰٓئِكَ هُمُ ٱلْخَـٰسِرُونَ ﴿٢٧﴾ (البقرة : 27)

பொருள்:*அவர்கள் அல்லாஹ்வுடன் உறுதியான உடன்பாடு செய்துகொண்ட பின்னர் அதை முறித்துவிடுவார்கள். மேலும், எந்த உறவு முறைகள் இணைத்து வைக்கப்படவேண்டும் என்று அல்லாஹ் கட்டளையிட்டுள்ளானோ அவற்றைத் துண்டிப்பார்கள், மேலும், பூமியில் குழப்பம்செய்து கொண்டு திரிவார்கள். உண்மையில், இத்தகையோரே இழப்புக்குறியவராவார்கள். (அல் பஃகறஹ்:27)*

வாக்குறுதி மீறுவது மற்றும் துரோகம் செய்வது, அளித்த வாக்குகளை விட்டுத் திரும்பிவிடுவது இவையனைத்தும் யூதர்களின் சமூகச் சீர்கேடான வழக்கங்களாகவே இருந்துவந்துள்ளன. முஸ்லிம் சமூகத்தைச்சேர்ந்த எவரும் இவ்வகையிலானகாரியங்களில் ஈடுபட்டு யூதர்களைப்போல் ஆகிவிடுவதை விரும்புவார்களா? அல்லாஹ்தான் நம்மைப் பாதுகாக்க வேண்டும்.

* * *

www.uzaifalahi.com